# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 35 January - 2022 Issue - 1**


ஆசிரியர் உரை

## இவ்விடம் விட்டுப் போவோம்!

**நா**ன் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் காலத்தில், அதாவது ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன், தமிழ் பாடக்கேள்வித்தாளில் **இடம் சுட்டிப் பொருள் தருக** என்று ஒரு கேள்வி இடம்பெறும். உரைநடைப் பகுதியிலிருந்து ஒரு **சொற்றொடர்** கொடுக்கப்படும். அது யாரால் சொல்லப்பட்டது, ஏன் சொல்லப்பட்டது, யாருக்குச் சொல்லப்பட்டது, எப்பொழுது சொல்லப்பட்டது, எங்கு சொல்லப்பட்டது என்று அதற்கு விளக்கப் பதில் அளிக்க வேண்டும். புதிய வருட முதல் மாத ஆசிரியர் உரைக்காக மேலுள்ள தலைப்பை நான் தெரிந்து கொண்டு, அதற்கான சிந்தனையில் இறங்கியபோது அது என்னைப் பள்ளி காலத்துக்கு இழுத்துச் சென்றுவிட்டது. ஆகவே, மேலுள்ள தலைப்புச் சொற்றொடருக்கு நான் பள்ளிப் பாணியிலேயே இங்கு பதிலளிக்கிறேன். இவ்விடம் விட்டுப் போவோம் என்பது இயேசு ஆண்டவரால் விளம்பப்பட்டது, காசுப்பிசாசு யூதாசு தவிர்த்த 11 சீடர்களிடம் சொல்லப்பட்டது, இயேசுவின் கடைசிப் பஸ்கா விருந்து முடிந்த கையோடு திரு விருந்தை ஏற்படுத்தினரால்லவா அது முடிந்து சொல்லப்பட்டது, எருசலேம் நகரத்தில் அவருடைய அறிவுரையின் பேரில் பஸ்கா விருந்து கடைப்பிடிக்கப்பட்ட வீட்டின் மேல் அறையில் சொல்லப் பட்டது, பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்துவிட்டதை அறிந்த நிலையில் சொல்லப்பட்டது (யோவான் 13,14 அதிகாரங்கள்) எப்படி? முழுப் மதிப்பெண் தருவீர்களா?!

சரி, இப்பொழுது ஆசானின் ஆசாரப்படி, நம்முடைய தலைப்புக்கான பின்னணித் தகவல்களைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

இரட்சகர் இயேசுவால் நடத்தப்பட்டதாக வேத எழுத்துக்களில் நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து உரையாடல்களில் ஒன்று யோவான் 13–17 அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளது. இது அவரின் இறுதி உரையாடல். இந்த உரையாடலைத் தன்னுடைய சீடர்களோடு நடத்தின அந்த நாட்கள் அவருடைய பூலோக வாழ்வின் இறுதிவாரம். பொதுவாக, ஆரம்பமும், இறுதியும் நினைவில் நிற்கக் சுடியவைகளாக இருக்கும். இவ்வகையில், இயேசு ஆண்டவரின் இந்த இறுதி உரையாடல் நினைவில் நிற்பதற்கு தேவையான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாகவே உள்ளது.

இந்த நீண்ட உரையாடலில், தலைப்புக்கான சொற்றொடர் 14 ம் அதிகாரத்தின் கடைசி வசனங்களில் உள்ளது. இனி நான் உங்க ளுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். **அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை** நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளை யிட்டபடியே செய்கிறேன் என்றும் உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும் **எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள்** என்றார். இத்தோடு இந்த உரையாடல் முடியாமல் 15, 16–ம் அதிகாரங்களிலும் நீண்டு 17–ம் அதிகாரத்தில் ஜெபத்தோடு நிறைவு பெறுகிறது. உருக்கமான அந்த மன்றாட்டில், தனக்காக மாத்திரம் இயேசு விண்ணப்பிக்காமல், தன்னுடைய சீடர்களுக்காகவும். தம்மில் விசுவாசம் வைக்கிற நம்மெல்லாருக் காகவும் ஜெபித்தார்.

யோவான் 13,14 அதிகாரங்களை நாம் குனிந்து கவனித்தால், இயேசு தன்னுடைய சீடர்களுக்கு அடுத்தடுத்த சில அதிர்ச்சிகளைத் தந்தார். ஆம், முதலாவது, நம்முடைய மொழிநடையில் சொல்வ தென்றால், இடுப்பில் துண்டைக்கட்டிக் கொண்டு **சீடர்களின் கால்களைக் கழுவித் துடைத்தார்** [13:4,5]. இச்செயலே அவர்களை மலைப்புள்ளாக்கி திகைக்கச் செய்த நிலையில், அதிலிருந்து மீள்வதற்குள் **உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்** என்று சொல்லி ஒரு குண்டைத் தூக்கி போட்டார் [13:21]. அப்படியே உறைந்து போய்விட்டார்கள். வாய் திறக்க வழியில்லாமல் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டார்கள் [13:22]. எப்படியோ அது யூதாசுதான் என அறிந்து கொண்டு, தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குள், அவர்களால் தாங்க முடியாத அளவில் மேலும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். **பிள்ளைகளே, இன்னும் கொஞ்ச காலம் நான் உங்களுடனே கூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் நான் போகிற இடத்துக்கு உங்களால் வரக்கூடாது என்றார்** [14:33].

எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பெற்றெடுத்த ஒரு பிள்ளை எப்படி எல்லாவற்றிற்கும் தன் தகப்பனைச் சார்ந்திருப்பார்களோ! அதுபோல, இவர்கள் எல்லாவற்றிலும் இயேசுவையே சார்ந்திருந்தார்கள். அத்தோடு, இயேசு பிரசங்கித்த ஆவிக்குரிய ராஜ்ஜியம் பற்றிய ஒரு **தவறான புரிதலும்** அவர்களுக்கு இருந்தபடியால் அவருடைய ராஜ்ஜியம் பூமிக்குரியதாக இருக்குமென்றும், **அதிலே தங்களுக்கு ஒரு முக்கியமான இடம் கிடைக்கும்** என்றும் எண்ணியிருந்தனர். சீடர்கள் எல்லாவற்றையும் விட்டு இயேசுவுக்குப் பின் வந்ததின் காரணங்களில் இதுவும் ஒன்று. இப்படிப்பட்ட மனநிலையில் இயேசுவின் கூற்று எப்படிப்பட்ட பேரதிர்ச்சியைத் தந்திருக்கும் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? அடப்போச்சா? எல்லாமே போச்சா என்று தங்கள் பரிதாப நிலையை எண்ணிக் குமுறி, நொந்து நூலாகியிருப்பார்கள். அப்படித்தானே!

இவைகளைத் தாண்டி இன்னுமொரு அதிர்ச்சியும் அவர்களை எதிர்நோக்கி இருந்தது. அவர்கள் மலையாய் நம்பிய இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு, **சிலுவைக்கு முன்னான வேதனைகளையும், சிலுவைப் பாடுகளையும் அனுபவிப்பதை** அவர்கள் கண்களால் காண நேரிடும். சீடர்கள் எந்தளவு இவைகளை முன்னறிந்தார்களோ தெரியாது. ஆனால், இயேசு எல்லாவற்றையும் அறிந்திருந்தார். தான் எதிர்கொள்ளும் சூழல் தன்னை நம்பி வந்தவர்களுக்கு எப்படிப்பட்ட மன பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கண்டார். இப்படித் தன்னுடைய சீடர்களின் மனநிலையை நாடிப் பிடித்த இயேசு, **பிள்ளைகளே** எனச் சொல்லி தன் பாசத்தையும், அவர்கள் மீதான அக்கறையையும் வெளிப்படுத்தினதோடு நிற்காமல் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக;** தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று தேற்றினார் ( யோவான் 14:1) பதிமூன்றாம் அதிகாரத்தில் அடுத்தடுத்து அதிர்ச்சிகளைக் தந்த இயேசு, 14-ம் அதிகாரத்தில் அடுத்தடுத்து **நம்பிக்கையின் வார்த்தைகளை ஊட்டிக் கொண்டே வந்தார்.** ஆம், **உங்களுக்காகப் போகிறேன். என்னிலும் பெரிய காரியங்களை செய்வீர்கள்; வேறொரு தேற்றரவளன் வருவார். உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன். சமாதானத்தை வைத்துப் போகிறேன்** என்றெல்லாம் கூறி நம்பிக்கைகளை அடுக்கினார். தன்னுடையவர்கள் மீது இயேசு கொண்டிருந்த அக்கறையை இங்கே உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? அவர்தான் இயேசு, நம் இயேசு!

இதன் பிறகு தான், **எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள்** என்றார் (14:31). அதை தொடர்ந்தே 15,16,17 ஆகிய அதிகாரங்கள் வெளிப்பட்டிருக்கிறது.

அதே மேலறையில் இருந்து இவைகளை வெளிப்படுத்தினாரா அல்லது கெத்சமனே தோட்டம் செல்லும் வழியில் வெளிப்படுத்தினாரா என்பது திட்டமாகத் தெரியாத ஒன்றாக உள்ளது. எது எப்படியோ இதன் பிறகு கெத்சமனே தோட்டம் நகரத்திற்குக் சென்றார். இந்தத் தோட்டம் கிழக்கே கெதரோன் ஆற்றுக்கு அப்புறத்தில் ஒலிவ மலையின் அடிவாரத்தில் இருந்தது. இயேசு தன் ஊழிய நாட்களில் அவ்வப்போது தேவனை நோக்கி மன்றாடுவதற்காக இங்கே சென்றுள்ளார்.

சரி, எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

I **பிதாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படியான விருப்பம்.**

இவ்விடம் விட்டுப் போவோம் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், பிதாவின் சித்தம் செய்ய வேண்டுமென்ற அவரது விருப்பம்.

சித்தம் என்றால் விருப்பம் அல்லது எதிர்பார்ப்பு. இப்பொருளினடிப்படையில் பரலோக பிதாவின் சித்தம் செய்வதில் இயேசுவுக்கு நிகர் இயேசுதான். எப்படியெனில், தன்னுடைய ஊழிய நாட்களில் சீகார் ஊராரிடம் **நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.** என்றார். [ யோவான் 4:34] போஜனம் என்றால் உணவு. எப்படி உணவானது ஒரு மனிதனுடைய சரீரத்துக்கு இன்பத்தையும், புத்துணர்ச்சியையும் கொடுக்கிறதோ அது போலப் பிதாவின் விருப்பத்தை, எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது இயேசு ஆண்டவரின் ஆன்மாவுக்கு எப்பொழுதும் இன்பத்தையும் புத்துணர்வையும் கொடுத்துள்ளது. இயேசு ஆண்டவர் ஊழிய நாட்களில் தன்னுடைய சீடர்களோடும், வெகு ஜனத்திரளோடும் சுற்றித் திரிந்தாரே அப்பொழுது மாத்திரம் இப்படிச் சொல்லாமல், சிலுவையின் நிழல் தன்மீது படிந்திருந்த நேரத்திலும் இப்படியாகத் தான் சொல்லியுள்ளார்.பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும். **ஆயினும், என்னுடைய சித்தத்தின்படியல்ல** உம்முடைய சித்தத்தின்படியே ஆக கடவது என்று விண்ணப்பம் பண்ணினார் [லூக் 22:42].

இப்படிப் பிதாவின் சித்தம் செய்யும் இயேசுதான், யோவான் 14:31 –ல் நான் என் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும் உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப் போவோம் என்றார். எதற்கு அவ்விடம் விட்டுப்

போகிறாராம்?. 1. பிதாவின் கட்டளைகளின்படி செய்வதற்கு 2. அப்படி அவர் செய்வதை உலகம் அறியும்படிக்கு இயேசுவின் இந்த சிந்தை தான் அவரை பின்பற்றுபவர்களுக்கு வேண்டுமென்று பவுலடியார் பிலிப்பியர் 2:25 – ல் கூறுகிறார். இருக்கிறதா?

இயேசு அந்த இடத்தை விட்டுப் போகும் போது அவருக்கு என்னவெல்லாம் காத்திருந்தது தெரியுமா? 1. அன்பின் அடையாளமான முத்தத்தைத் துரோகத்தின் சின்னமாக மாற்றிய கயவன் யூதாசால் அவர் காட்டிக் கொடுக்கப்படுவார். 2. போர்ச்சேவகராலே கட்டப்படுவார் (யோவான் 18:12). 3. அநியாயம் பிடித்த அன்னாவாலும், காய்மாகார உணர்வு கொண்ட காய்பாவாலும் விசாரிக்கப்படுவார். 4. உற்ற நண்பனாய் இருந்து, தீங்கு செய்ய மாட்டேன் என்று சபதம் செய்த பேதுருவால் மறுதலிக்கப் படுவார். 5. ஈவு இரக்கமில்லாதவர்களால் இம்சிக்கப்படுவார். 6. முதுகெலும்பில்லாத பிலாத்துவுக்கு முன்பாக நிறுத்தப்படுவார். 7. இறுதியாக, பிலாத்துவால் எந்த தர்ம நியாயமுமில்லாமல் சிலுவைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரச் சிலுவையில் கொடூர மரணம் அடைவார். எல்லாம் அவருக்குத் தெரியும் ஒருவேளை நமது வாழ்வின் அடுத்த நொடியில் என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இவைகளனைத்தும் நடக்கும் என்பது இயேசுவுக்குத் தெரிந்தே இருந்திருக்கும். ஆயினும், அவர் எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப் போவோம் என்று கூறியுள்ளார்.

அருமையானவர்களே! பிதாவின் சித்தம் செய்வதில், பிதாவின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் நாம் நம்பக்தி வாழ்வில் எந்த இடத்தில் உள்ளோம்? இயேசுவைப் போல், அதற்காக என்ன விலை கொடுக்க வேண்டியது வந்தாலும் நான் தயார் என்று சொல்ல முடியுமா? பதில் சொல்லுங்கள்! வெறுமனே இயேசு, இயேசு என்றும் பிதா, பிதா என்றும் சொல்லுகிறவர்களாயிருந்தாள், சல்லிக் காசுக்குப் பயனில்லை. ஆண்டவருக்கும் பரலோகப் பிதாவுக்கும் பலவிருப்பங்கள் உண்டு. அவைகளில் ஒன்றை நாம் I தீமோ 2:4–ல் காண முடியும். **எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ள வராயிருக்கிறார்.** ஆக, நாம் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவது தேவ விருப்பம். அப்படியானால், நாம் இரட்சிக்கப்பட்டுவிட்டோமா? இன்னும் சொல்வதென்றால், சுவிசேஷத்தின் உபதேசப்படி இரட்சிப்படைந்து விட்டோமா? சொல்லுங்கள்.

ஒருவேளை, இல்லை என்பது உங்கள் பதிலாக இருக்கு மானால், விசுவாசித்து (மாற் 16:15,16) மனந்திரும்பி (அப்.2:38) இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து

(ரோமர் 10:9,10). பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப் 22:16). அப்பொழுது தான், நீங்கள் தேவச் சித்தத்தை நிறைவற்றினவர்களாக மாற முடியும்.

II **பிசாசை எதிர்கொள்ளும்படியான விருப்பம்**

இவ்விடம் விட்டுப் போவோம் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், பிசாசை எதிர்க்க அவர் எப்பொழுதும் தயாராயிருந்தார் என்பது.

யோவான் 14:30 ல், இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்றார். **உலகத்தின் அதிபதி வருகிறான். ஆகவே, இவ்விடம் விட்டுப்போவோம்** என்று கூறவில்லை. பிசாசை அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறின நாள் தொடங்கி எதிர்த்து வெற்றி கண்டுதான் வருகிறார் (மத்.அதி4) பிசாசின் தந்திரகளையும், இயேசுவின் செயல் பாட்டையும் நன்கு அறிந்தபடியால்தான் யாக்கோபு ஆசிரியர், ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; **பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்கை விட்டு ஓடிப்போவான்** என்றார் ( யாக்கோபு 4:7)

இங்கே இயேசு பிசாசை உலகத்தின் அதிபதி என்று கூறுகிறார். இது ஏன் என்பதற்கான பதிலை இத யோவான் தனது முதலாம் நிருபத்தில் தந்துள்ளார். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும் **உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்** என்று (I யோவான் 5:19). பிசாசு, உலகத்தின் அதிபதி என்பதை பவுல் சற்று மாற்றி. **இப்பிரபஞ்சத்தின் தேவன்** என்று கூறுகிறார். (II கொரிந்தியர் 4:4). இன்னும் வேறு பல வசனங்களும் இவனின் இத்தன்மை பற்றி சான்று பகர்கிறது. (யோவான் 12:31) (எபேசியர் 2:2 யோவான் 16:11). பேதுரு அப்போஸ்தலன், **உங்கள் எதிராளியாகிய பிசாசானவன்** கெர்ச்சிக்கிற சிங்கம் என்கிறார் (I பேதுரு 5:8) இப்பிசாச பற்றி இயேசு ஆண்டவர் **மனுஷ கொலைபாதகன்** என்று சொல்லியுள்ளார் (யோவான் 8:44)

இப்படி ஏதேன் தோட்டம் துவங்கி மனுஷ கொலைபாதகனாயிருந்து, எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிந்து எண்ணிலடங்காதாவர்களை விழுங்கின பிசாசு பற்றி, உலகத்தின் அதிபதி வருகிறான் **அவனுக்கு என்னிடத்தில் ஒரு குற்றத்தையும் காண முடியாது என்றார்.** அதாவது, நான் காட்டிக் கொடுக்கப்படுவதற்கும், கைது செய்யப்படுவதற்கும் விசாரிக்கப் படுவதற்கும் நியாயமான எந்த முகாந்திரமுமில்லை என்றார்.

ஆயினும், தேவச் சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுக்க விரும்புகிறபடியால் எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப் போவோம் என்று கூறினார். புரிகிறதா?

அருமையானவர்களே! மனுஷ கொலைபாதகனாகிய பிசாசை, கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசை எதிர்கொள்வதில் நாம் எப்படிப் பட்டவர்களாயுள்ளோம்? வஞ்சக குணம் கொண்ட அவனிடம் நாம் ஏமாந்துதானே போகிறோம்! அவன் கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய பலவீனங்களுக்குத் தகுந்தாற்போல் காய் நகர்த்தி கடைசியில் ஒரேயடியாய்க் கவிழ்த்து விடுகிறான் தானே. பாருங்கள் முதாலவது, மனதில் தேவனுக்கு விரோதமாகச் செயல்படும்படியான **ஏவுதலைக்** (எண்ணத்தை) கொடுக்கிறான் (I நாளா21:1) அதற்கு இடம் கொடுக்கும் போது, நைசாக உள்ளே **புகுந்துவிடுகிறான்** (லூக்கா 22:3). பிறகு, நம்மை அவன் கட்டுபாட்டுக்குள்ளாகக் கொண்டுவந்து , அவனுடைய நோக்கம் நிறைவேறத்தேவ விரோதச் சிந்தனைகளால் **நிரப்பிவிடுகிறான்.** அப்பொழுது நாம் அவனுக்கு மண்டியிட்டு விடுகிறோம்.

ஆனால் , இயேசுவோ, **அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை** என்று மார்தட்டினார். பரலோகம் நம் நோக்கமாக இருக்குமானால், இயேசுவைப் போல் பிசாசை எதிர்க்கும் திராணியை நாம் பெற்று, அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லையென்று அவனுக்குச் சவால் விடுகிறவர்களாக நாம் மாறவேண்டும்.

III **பிதாவின் சித்தம் நிறைவேற செயல்படும் விருப்பம்:**

இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், இயேசு பிதாவுக்காகச் செயல்படத் தயாராயிருந்தார் என்பது.

உண்மையில், இயேசுவின் செயல்பாடு என்பது இப்பூலோக வாழ்வை அவர் மேற்கொண்டதற்குப் பிறகான ஒன்றல்ல. உலக சிருஷ்டிப்பிலிருந்தே நாம் அதைக் காண முடியும் ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்த்தார் (ஆதி:1:1) இங்கே **தேவன்** என்பது **பன்மைப் பொருள்** தரும் ஒரு வார்த்தை. தேவத்துவத்தின் மூவரும், அதாவது பிதா , குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் அங்கு செயல்பட்டுள்ளனர். இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக பவுலடியார், கொலோசெயருக்கு எழுதினபோது, சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது என்றார் (கொலோ1:16). இந்த இயேசுவானவர், மனிதனை மீட்கும்படியான தேவனுடைய அநாதித் திட்டத்தின்படி

இயேசுவை இப்பாழுலகிற்கு அனுப்பச் சித்தங் கொண்ட போது இயேசு எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் இப்பூமிக்கு வந்தார் [யோவான் 3:16] அதுவும் எப்படி வந்தார்? ஏழ்மைக் கோலத்தைத் தாண்டி அடிமையின் ரூபமெடுத்து வந்தார் [பிலி2:7] இப்படிப் பூமியில் அவதரித்த இயேசு எதிர்கொண்ட எதிர்ப்புகள் ஏராளம். ஆயினும், தேவச் சித்தத்தை நிறை வேற்றும்படியான வேலையை எதுவும் தடுத்து நிறுத்த முடிய வில்லை.

இப்படி எல்லாவற்றையும் எதிர்கொண்ட இயேசுதான், தம் பூலோக வாழ்வின் இறுதி வாரத்தில் எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள் என்றார். கெத்சமனே தோட்டம் முதல் கொல்கொதா வரைக்குமான வழிநெடுகிலும் என்னென்ன நடக்கும் என்பதை முழுக்க முழுக்க அறிந்திருந்தும் போவோம் வாருங்கள் என்று கூறினார். எந்த நிலையிலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு அவர் தயங்கினதோ, தடுமாறியதோ இல்லை. பிசாசின் மனிதர்களும் யூத மதத் தலைவர்களும்,ரோம அரசாங்கத்தாரும் சிலுவைக்கு முன்பாகப் போட்ட வெறியாட்டங்கள் எதுவும் அவரை ஏன் என்று கூடக் கேட்கவில்லை. எல்லாவற்றையும் சகித்து சிலுவையிலே வெற்றி சிறந்தார். [கொலோ2:15]. இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தலுக்கு பரத்திலிருந்து அவருக்கு பலன் கிடைத்ததா? நிச்சயம் கிடைத்தது. கல்லறையும், பாதாளமும் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. [ லூக் 24 :2.7; அப் 2:3] இயேசு தேவனுடைய வலது பாரிசத்தி இப்பொழுது விற்றிருக்கிறார் [கொலோ3:1 ; எபி 12:2].

அருமையானவர்களே! தேவச் சித்தம் நிறைவேற்றவதில் நம்முடைய நிலை என்ன? பரலோகத்தின் தேவனால் அனுப்பப்பட்டு அடிமையின் ரூபமெடுத்து வந்த இயேசு ஆண்டவரால் அருளப்பட்ட ஒட்டு மொத்த புதிய ஏற்படும் நாம் நிறைவேற்றும்படியான தேவச் சித்தமாகவே உள்ளது. இதில் யாருக்கும் எவ்வித மாற்றுக் கருத்தும் தேவையில்லை. ஒட்டு மொத்த புதிய ஏற்பாட்டு உபதேசமும் நாம் கீழ்ப்படியும்படியான தேவச் சித்தமாகவே உள்ளது. அப்படியானால், நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? இயேசுவை உடன் பிறந்தவர்கள் எதிர்த்தார்கள், சமுதாயம் எதிர்த்தது, மதத்தலைவர்கள் எதிர்த்தார்கள், மரணத்திற்கு உட்படுத்தும் அதிகாரம் கொண்ட சனகரீம் சங்கம் எதிர்த்தது, ரோம அரசாங்கம் எதிர்த்தது. இயேசு எங்காவது தடுமாறினாரா? ஆனால், நாமெல்லாம் ஒன்றுமில்லாத அற்ப்பக்காரணங்களைப் பிரச்சனைகளாகவும், எதிர்ப்புகளாகவும் கருதி கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குக் கீழ்படிந்து, புதிய ஏற்பாட்டு சபையில் அங்கம் வகிப்பதை வீணடிக்கிறோமே. இது நியாயமா? புதிய ஆண்டில் சிந்தித்துச் செயல்படுவோம். சத்தியத்திற்காய் வாழ்ந்து ஒருநாளில் இப்பூலோகத்தை விட்டுப் பரலோகத்திற்குக் கடந்து போக ஆயத்தமாவோம்! ஆமென் !!! ✝

# விசுவாசத்தினாலே இரட்சிப்பு

Bro. J.C. **சோட்**

**வி**சுவாசத்தினாலே இரட்சிப்பு என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதாவது, இழந்து போன ஒரு பாவி விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறார். இதையே வேறுவிதமாகச் சொன்னால், அந்நபர் விசுவாசத்தினாலே நீதிமானக்கப்படுகிறார். மனுஷர் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப் படுகிறான் என்று அறிகிறோம் [ரோமர் 3;28]. இங்கே, பவுல் குறிப்பிடுகின்ற நியாயப்பிரமாணம் மோசேயின் பிரமாண மாயிருக்கிறது. தொடர்ந்து பவுல் சொல்லும் போது, இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் [ரோமர்5:1]. எனவே, இரட்சிப்பு விசுவாசத்தினாலே என்பதை நாம் மறுக்க முடியாது.

இரட்சிப்பு விசுவாசத்தினாலே என்பதை நாம் மறுக்க முடியாவிட்டாலும் கூட, விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு என்று நாம் போதிக்க முடியாது. ஆனால், கிறிஸ்தவ மார்க்கத்தில் பெரும்பான்மையோர் விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்று எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம், **மாத்திரம்** என்னும் வார்த்தையைச் சேர்த்து, ஒருவர் **விசுவாசத்தினாலே மாத்திரம்** இரட்சிக்கப் படுகிறார் என்னும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர். இது உண்மையல்ல. இரட்சிப்பு விசுவாசத்தினாலே மாத்திரம் உண்டா வதில்லை. இதை யாக்கோபு ஆசிரியர் இன்னும் சற்று கூடுதலாகவே மெருகேற்றுகிறார். யாக்கோபு 2:24, ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதி மானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

ஒருவர் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப்படவில்லை யென்றால், வேதவாக்கியங்கள் விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்று போதிப்பதின் பொருள் என்ன? இங்கே, போதனை என்ன வென்றால், விசுவாசம் என்பது வெறுமனே இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்ளாமல், அதைவிட மேலாக அதை **கிரியைகளிலே** வெளிப்படுத்த வேண்டும். ஆம் விசுவாசம் என்பது தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுவது. அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது, கீழ்ப்படிதலோடு அவருக்காகக் கிரியை செய்வது. தேவனும், தம்முடைய கிருபை யினாலே நம்மெல்லோருக்கும் இரட்சிப்பை அருளுகிறார். அதை நாம் விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும் ஏற்றுக் கொள்ள

வேண்டும். இதினிமித்தம் ஒருவர் இரட்சிக்கப்பட கர்த்தர் கட்டளையிட்டிருக்கிற எல்லாவற்றையும் செய்து முடித்தாலும் கூட, அவருடைய இரட்சிப்பு அவரின் விசுவாசத்தினாலேயும், தேவனுடைய கிருபையினாலுமே சாத்தியமாகிறது.

இது எப்படி உண்மையாயிருக்கிறது என்று பார்ப்போம். யோவான் 3:16–ல், கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். இங்கே, நாம் கேட்க வேண்டிய கேள்வி ஒருவர் யாரை விசுவாசிக்க வேண்டும்? இதையே வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக் கிறீர்களா? என்று யாராவது ஒரு நபரிடம் கேட்டால், ஆம், விசு வாசிக்கிறேன் என்று அந்நபர் சொல்ல வேண்டும். அடுத்த கேள்வி, அவர் சொல்லுகிறதைச் செய்யும் அளவுக்கு அவரிடம் நீங்கள் அன்பு கூருகிறீர்களா? ஆம், என்றால், அந்நபர் உண்மை யாகவே அவரிடத்தில் அன்பு கூர்ந்தால் அவர் சொல்லுகிறதைக் செய்கிறவராக இருக்க வேண்டும். ஆகையால், கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப் படிகிற அளவுக்கு ஒருவர் விசுவாசிக்க வில்லை யென்றால், உண்மையாக அந்நபர் தேவனை விசுவாசிக்க வில்லை என்று தான் பொருள்.

குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனா யிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனொ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும் என்றான் ( யோவான் 3:236). இவ்வசனத்தின் இரண்டாம் பகுதியில், குமாரனை விசுவாசியாதவனுக்கு என்ன நடக்கும் என்பதைக் கவனியுங்கள். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை என்றுள்ளது. அதாவது, குமாரனை விசுவாசித்துக் கீழ்ப்படிகிறவன் நித்திய ஜீவனை உடையவனா கிறான், குமாரனை விசுவாசித்துக் கீழ்ப்படியாதவர்கள் நித்திய ஜீவனைக் காண்பதில்லை.

இதற்கான செயல்பாட்டைக் கீழ்க்காணும் வசனங்களில் நாம் காண முடியும். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான், அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கி றேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள்

தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப்.8:36-39). இங்கே, பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். அப்பொழுது எத்தியோப்பிய மந்திரி என்ன செய்தார்? அவர் கிறிஸ்துவை அறிக்கையிட்டு கிறிஸ்துவை முழு இருதயத்தோடும் விசுவாசித்தான், அதாவது அவர் தன் விசுவாசத்தை கர்த்தருக்குக் கீழ்ப்படிவதின் மூலமாகக் காட்டினார். ஆகவேதான் அவர் இரட்சிக்கப்பட்டார்.

மேலும், பவுலும், சீலாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப்.16:31) என்று சிறைச்சாலைக்காரனிடத்தில் சொன்னார்கள். பலர் இங்கேயே நின்று விடுகிறார்கள். ஆனால், இது சரியானதல்ல. ஏனென்றால், யார் இந்த சிறைச்சாலைக்காரன்? அவன் ஒரு அவிசுவாசியாக இருந்தான். முதலில் விசுவாசிக்க வேண்டிய தாயிருந்தது. ஆகையால், அவனும் அவன் வீட்டாரும் விசுவாசிக்கத் தக்கதாக பவுலும், சீலாவும் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்கள். விசுவாசம் உண்டான பிறகு(ரோமர் 10:17), சிறைச்சாலைக்காரன் அவர்கள் கால்களைக் கழுவினான். இதன் மூலம் அவன் தன்னுடைய மனந்திரும்புதலைக் காட்டினான். அதன் பின்பு அவனும், அவன் வீட்டாரனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மிக எளிமையாக, அதே நேரத்தில் மிகத் தெளிவாக, விசுவாசமுள்ளவனாகி விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:16) என்று சொல்லியிருக்கிறார். நம் ஆண்டவர் எங்கேயாவது விசு வாசத்தினாலே மாத்திரம் என்று சொல்லி விட்டு, நீங்கள் மற்ற கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டாம் என்று சொல்லி யிருக்கிறாரா? நிச்சயமாக இல்லை. இங்கே செய்தி என்ன வென்றால், ஒருவருக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் உண்மையான விசுவாசம் இருந்தால், அந்த விசுவாசம் அந்நபரை ஆண்டவருக்கு கீழ்ப்படியப்பண்ணும். அதாவது, அவர், நிச்சயமாக தன்னுடைய விசுவாசத்தைக் கிரியைகளில் காட்டுவார் அல்லது நிரூபிப்பார். மேலும் நாம் எபிரெயர் 11-ம் அதிகாரத்தைப் வாசித்தால், தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய பக்தி வாழ்வில் எப்படித் தங்கள் விசுவாசத்தைக் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் காணமுடியும். ஆகையால் ஜீவபுத்தகத்தில் நம்முடைய நாமங்களும் பதியப்பட பக்தி வாழ்வில் கிரியையுடன் கூடிய விசுவாச வீரர்களாய் ஜொலித்து மற்றவர்களையும் இப்பாதைக்கு அழைத்து வர அருட்பணி செய்வோம். ✝

பெண்கள் பகுதி

# முழுநேரக் கிறிஸ்தவர்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இப்புதிய வருடத்தில் தேவனுடைய வார்த்தைகளை பகிர்ந்து படிப்பதற்கு தேவன் கொடுத்த சிலாக்கியத்துக்காக அவருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுத்துக் கொள்கிறேன்.

கிறிஸ்தவர்களாக இருப்பதைக் காட்டிலும் மிகப் பெரும் ஒரு சிலாக்கியம் வேறு எதுவுமே இல்லை. அதை முதலாவது கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாம் உணரவேண்டும். ஞாயிற்றுக்கிழமை அன்று காலை நாம் கிறிஸ்தவர்கள் என்ற நிலைதான் இருக்கிறதே ஒழிய அன்றாடம் அதாவது ஒவ்வொரு நாளும், நிமிடத்துக்கு நிமிடம் கிறிஸ்தவர்களாக இருப்பது அவசியம். அப்போஸ்தலர் நடபடிகளை எழுதின லூக்கா, குறைந்தது எட்டு([8] முறை தினந்தோறும் என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். அப் 2:46, 47 ஆகிய வசனங்களிலும், 16:5–லும் நாள்தோறும், தினந் தோறும் ஒரு மனப்பட்டவர்களாய், தேவாலயத்திலே கூடிவந்தார்கள். நாளுக்கு நாள் சபை பெருகிற்று என்று வாசிக்கிறோம். மேலும், தினற்தோறும் உபதேசம் பண்ணினார்கள் என்று [அப்:5:42; 17:17; 19:9] வசனங்களிலும், அன்றாடம் உணவு தேவைப்படுவோரை போஷித்தார்கள் [6:1] என்றும், தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள் [அப்17:11] என்றும் வாசிக்கிறோம். முழு நேரக் கிறிஸ்தவர்களோடு இருக்க விரும்பினார்கள். ஒவ்வொரு நாளும் அவர்களை உற்சாகப்படுத்தினதோடு இல்லாமல் மற்றவர் களோடு சேர்ந்து வேதத்தை படிக்கவும், ஜெபம் பண்ணவும், உபதேசம் பண்ணவுமே விரும்பினார்கள்.

தொற்காள் நற்கிரியைகளைத் தொடந்து செய்து கொண்டே வந்தாள் என்று காண்கிறோம்.

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் குறைந்தது இருமுறையாவது சபைகளை சந்தித்து அவர்களோடு வேலை செய்து மற்றும் தங்கள் வீட்டில் சபை கூடி வரவும் அனுமதித்தார்கள். பிலிப்பி பட்டணத்தில் தான் ஞானஸ்நானம் எடுத்த உடனே லீதியாள், பவுலையும் அவனோடிருந்தவர்களையும் தங்கள் வீட்டில் தங்கியிருந்து உபதேசம் செய்யும்படி வருந்திக் கேட்டுக் கொண்டாள்.

அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படும் நம் ஆதிக்கிறிஸ்தவ சகோதரரும், சகோதரிகளும் முழு நேரக் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். ஒரு முறை அவர்கள் கர்த்தருக்குள் கீழ்ப்படிந்திருந்த

தினாலே, தங்கள் வாழ்க்கையில் இருக்கும் எல்லாமே அதாவது உடமைகள், வேலை, பழைய நம்பிக்கை, பழைய பாவ பழக்கங்கள் இப்படி எல்லாமே தள்ளப்பட்டு, தேவனுக்கு வேலை செய்வது முதல் இடத்தை பிடித்துவிட்டது. எப்படி நமது உடலில் இரத்தம் சிரை, தமணி என்ற குழாய்கள் வழியாக ஓடிக் கொண்டேயிருக்கிறதோ, நுரையீரலில் காற்று தொடர்ந்து நிரம்பிக் கொண்டேயிருக்கிறதோ, அதுபோல, உயிர் வாழ உணவும், நீரும் சரீரத்திற்கு அத்தியா வசியமோ அதுபோல வழிந்தோடிக் கொண்டிருந்தது.

முழுநேரக் கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தில் சந்தோஷமாய் இருந்தார்கள். அவர்கள் முழுமையாக அர்ப்பணித்த கிறிஸ்தவர்கள் என்றால், ஏதோ அவர்கள் ஒரு பாவமும் செய்யவில்லை. பெலவீனம் என்பதோ, பயம், சந்தேகங்கள் என்று எதுவுமே இல்லை என்று சொல்லிவிடமுடியாது. இன்றைய காலத்தில் வாழும் நம்மைப்போல அவர்களும் மனிதர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால், அவர்கள் அர்ப்பணிப்பும், விசுவாசமும் ஒன்றாக இணைந்து அவர்களை பலப்படுத்தினபடியால் எல்லாவற்றையும் சகித்து உபத்திரவத்தி லேயும் களிகூர்ந்திருந்தார்கள்.

லூக்கா, ஆசிரியர், அப் 4 மற்றும் 5-ம் அதிகாரத்தில் சகிப்புத் தன்மையையும், உபத்திரவத்தில் மகிழ்ச்சி பற்றியும் இரண்டு உதாரணங்களையும் கொடுத்து விளக்குகிறார். இயேசுவைக் குறித்து பேசக்கூடாதென்று பேதுருவையும், யோவானையும் காவலில் போடுவதற்கு கட்டளையிட்டு விட்டார்கள். அவர்கள் விடுதலையான பிறகு மீண்டும் நம்பிக்கையோடு தேவனுடைய வார்த்தையைப் பேச வேண்டும் என்பதற்காக ஒரு ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது (அப் : 4:29). **மனுஷ ருக்குக் கீழ்ப்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (29) என்று சொல்லத்தக்க அளவிற்கு பெலனும், தைரியமும் அடைந்தார்கள்.** இயேசுவின் நாமத்தைக் குறித்து போதகம் பண்ணக் கூடாதென்று உறுதியாய் கட்டளையிட்டிருந்தும், அடித்து துன்புறுத்திய, இருந்த போதிலும் பேதுருவும், யோவானும், அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுபோய், தினந்தோறும் தேவாலய த்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தாரர்கள் (5:41;42)

இந்தக்; காரியங்களையெல்லாம் பார்க்கும் போது அவர்களின் அர்ப்பணிப்புதான் வெளிப்படையாகத் தெரிகிறது. சிறையில் அடைப்பு, பல கேள்விக் கணைகள், ஜனக்கூட்டத்திற்கு முன்பாக அவமதிப்பு, இவைகளின் மத்தியிலும் மகிழ்ச்சியாக தேவனுடையவார்த்தைகளை போதித்து வந்தார்கள். இது தான்

முழு நேர கிறிஸ்தவர்களின் வேலையாக இருந்துள்ளது.

முழுநேரக் கிறிஸ்தவம் என்பது தியாகம் நிறைந்த வாழ்க்கை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் புதிதாக மனந்திரும்பி சபைக்குள் இருக்கிறவர்களுடைய சரிர தேவகைள், ஆவிக்குரிய தேவைகள் உடனுக்குடன் சந்தித்தார்கள். சரீரப்பிரகாரமானபசி ஆவிக்குரிய ஆகாரத்தால் திரும்தியாகாது. அவ்வாறே ஆவிக்குரிய பசி சரீர பரிபூரணத்தால் திருப்தி செய்ய முடியாது. எனவே, ஆதித்திருச் சபையார் எப்படியாவது மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள் அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை [அப்4:35] என்று பார்க்கிறோம்.

அப் 9 –ம் அதிகாரத்தில் தொற்காள் நற்கிரியைகளுக்கு பேர் போனவள் என்பது அனைவரும் நன்றாக அறிந்த ஒன்று. தேவையில் இருப்பவர்களுக்கு துணிகள் தைத்து கொடுப்பாள். 6ம் அதிகாரத்தில் கிரேக்க விதவைகள் விசாரிக்கப்படாமல் இருந்தபோது உடனே ஒரு திட்டம் போட்டு பிரச்சனையை தீர்த்தார்கள் அந்தியோகியாவில் இருக்கும் சீஷர்கள் அன்றைய உலகத்திலே பஞ்சம் வந்தபோது பணம் சேகரித்து யூதேயாவில் உள்ள சீஷர்களுக்கு கொடுத்தார்கள் [அப்:11:28,29]. பின் நாட்களில் அப்பவுல் தன் தேவைகளுக்கு சபைகள் தொடுத்து உதவிய விதத்தை [பிலி:4:15–18]–ல் அருமையாக விளக்குகிறார்கள். மேலும், II கொரி 8:1–5ல் மக்கெ தோனியா சபையார் தங்கள் திராணிக்கு மிஞ்சியும், கொடுத்ததோடு, முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.

இதை வாசிக்கும் அன்பான சகோதரிகளே! முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் முழுநேரக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்தார்கள். பல காரணங்கள் இருந்தாலும் இரண்டு முத்தான மற்றம் குணமான அர்பணிப்பு , தியாகம் இவைகளை பற்றி பார்த்தோம். இன்றைக்கு நம்முடைய கிறிஸ்தவ வாழ்வு? அர்ப்பணிப்பு எந்தளவு உள்ளது? தியாகம் என்றால் அர்த்தமே தெரியாமல் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டுள் ளோமா? அப் 17 :6 –ல் வாசிக்கிறபடி உலகத்தை கலக்கு கிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் என்று சொல்லும்படி வாழ்ந்து கொண்டுள்ளோமா? உலகத்துக்கும், நமக்கும் விததியாச மேயின்றி உலகம் போகிற போக்கிலே செல்வதுதான் கிறிஸ்தவம் என்று நம்முடைய அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கை போய்க் கொண்டு ள்ளதா? அப்பர்பணிப்பு, தியாகமும் சபை வளர்வதற்கு தினந்தேறும் தேவைப்பட்டது என்று அப் நடபடிகிலில் காண்கிறோம்.

அருமையானவர்களே ! நாமும் கொஞ்சம் சத்தியத்திலே நின்று, தேவனை முன் நிறுத்தி நம் அன்றாடக்கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது என்று கர்த்தர் கொடுத்த இந்த புதிய வருடத்திலே சிந்திப்போம், செயல்படுவோம். தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்! ஆமென்!!

✝

## வாலிபர் பகுதி

# எபேசு சபை

Dr. **ஏபில் நாயகம்**

கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். வருடத்தை நன்மையினால் முடிசூட்டுகிற தேவன் உங்களோடு இருந்து உங்களைக் காத்து நடத்துவராக. சரீரத்திலும், ஆத்துமாவிலும் நீங்கள் சுகித்து வாழ உங்களை வாழ்த்துகிறேன். நிரந்தமில்லாத உலகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதையும், நித்தியமான தேவனை மட்டுமே சார்ந்து நாம் வாழ வேண்டும் என்பதையும் நமக்கு நினைப்பூட்டும் விதமாக, கொரோனா நோய்த்தொற்று இந்த வருடமும் நம்மை தொடர்ந்துரத்கிறது. இரண்டாம் அலையில் ஏற்பட்ட பாதிப்புகளைப் போலில்லாமல், இம்முறை குறிய காலத்தில் இது கடந்துவிடும் என்று கணிக்கப் படுகிறது. இந்த நோய்த்தொற்றிலிருந்து நாம் நம்மை பாதுகாக்க அனைத்து முயற்சிகளையம் கவனத்தோடு எடுக்க வேண்டும். எப்படி நம் சரீரத்தை நாம் வியாதிகள் வராத வண்ணம் பார்த்துக் கொள்கி றோமோ, அதைப் போல நம் ஆத்துமாவையும் நம் கவனத்தோடு பாதுகாக்க வேண்டும்.

பிரியமானவர்களே! வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ஆவியானவர் யோவான் மூலமாக ஏழு சபைகளுக்குக் கடிதங்களை எழுதி, அவ்வேழு சபைகளையும் எச்சரிக்கிறார். அந்த சபைகளில் காணப்பட்ட நற்காரியங்களையும், நற்குணங்களையும் பாராட்டி விட்டு, அவர்களுள் இருந்த குறைகளையும் சுட்டிக்காட்டுவதை நாம் வாசிக்க முடியும். தேவன், நம்முடைய நற்கிரியைகளை மட்டும் கவனித்து நம்மை ஆசீர்வதிப்பார் என்ற எண்ணம் தவறு என்பதை இந்த கடிதங்கள் மூலம் நாம் கற்றுக்கொள்கிறோம். நம் குறைகளை நாம் நிவிர்த்தி செய்யாத பட்சத்தில், நம் நற்காரியங்கள் நமக்கு உதவாது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஏழு சபைகளில் முதலாவதாக குறிப்பிடப்பட்டிருக்கும் எபேசு சபையை நாம் கவனித்து, அதிலிருந்து நமக்குத் தேவையான காரியங்களைக் கற்றுக் கொள்ளலாம். எபேசு சபையைப் பற்றி நாம் அப்போஸ்தலர் நடபடிகள், எபேசியர் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புத்தகங்களில் வாசிக்க முடியும் . பவுல், தீமோத்தேயு போன்ற சிறந்த தேவ தாசர்களால் வழிநடத்தப்பட்ட சபையாக இச்சபை இருந்துள்ளது. ஆனால், வரலாற்றை நாம் பார்க்கும் பொழுது மூன்று தலைமுறைகளை மட்டுமே கண்ட சபையாக இருந்தது என்று அறியப்படுகிறது. சிறந்த தேவ மனிதர்களால்

வழிநடத்தப்பட்ட சபையாக இருந்தாலும், நற்காரியங்களையும் நற்கிரியைகளையுடைய சபையாக இருந்தாலும், களையப்பட வேண்டிய காரியங்கள் களைந்து போடப்படமால் இருக்குமாயின் அழிவு நிச்சயம் வரும் என்பதை நாம் இச்சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

வெளி 2:1 –7, வசனங்களை நாம் கவனிப்போம். பிரியமானவர்களே! இந்த கடிதத்தின் மூலம் நாம் தெரிந்துக்கொள்ளக் கூடிய முதலாவது காரியம், **தேவன் அறிந்திருக்கிறார்.** ஆம், தேவன் நம்மை அறிந்திருக்கிறார். இது நமக்கு இரண்டு முக்கியமான புரிதலை தர வேண்டும் 1] தேவன் நம் எண்ணங்களையும், சிந்தனைகளையும், செயல்களையும் கவனிக்கிறார். அவர் நம் இருதயத்தை அறிகிறார் என்ற ஆறுதலைத் தரும். புரிதல், II] அதே தேவன் நம் பாவத்தையும், அவிசுவாசத்தையும் கவனிக்கிறார் என்ற பயத்தை தரும் புரிதல். இரண்டும் நமக்கு தேவையான புரிதல்களே!

இரண்டாவது பாடம், எபேசு சபையினிடம் இருந்த நற்கிரியங்கள். 2,3,6 ஆகிய வசனங்களைப் பார்க்கும் போது பல நல்ல காரியங்கள் அவர்களைப் பற்றி சொல்லப்பட்டிருப்பதை கவனிக்க முடியும். பொறுமை, பொல்லாதவர்களை சகிக்காமலிருப்பது, வேற்றுமையான உபதேசத்தை சோதிப்பது, தேவனுக்காக இளைப்படையாமல் பிராயசப்படுவது, தேவன் வெறுக்கிற காரியங்களை வெறுப்பது போன்ற சிறந்த கிறிஸ்தவ குணாதி சயங்களை நாம் வாசிக்க முடியும். இது போன்ற கிறிஸ்தவ குணங்களடங்கிய சபையை இக்காலத்தில் கண்டுபிடிப்பது அரிது.

அப் 20:29,30 ஆகிய வசனங்களில், உபதேச ரீதியாக அவர்களுக்கு வரப்போகும் ஆயுதத்தை பவுல் அவர்களுக்கு முன்னமே சுட்டிக்காட்டி எச்சரித்திருந்தார். அதை ஏற்றுக் கொண்டு விழிப்போடு இருந்து, மாற்று உபதேசங்களுக்கு அவர்கள் தங்களை கீழ்ப்படுத்தாமல் இருந்திருக்கிறார்கள். அடடா, எவ்வளவு சிறந்த சபை என்று எண்ணத் தோன்றுகிறது. இவர்களைப் போல் இருக்க வேண்டும் என்ற உற்சாகத்தை தருகிறது. இயேசுவினாலே மெச்சப்பட்ட சபைகளில் ஒன்று என்ற உயரிய நிலையை இது பெற்றது. நாமும் நியாயத்தீர்ப்பின் நாளிலே மெச்சப்பட வேண்டுமானால் நற்கிரியைகளையுடைய சபையாய், சபையின் அங்கத்தினராய் இருக்க வேண்டும். ஆனால், அது மட்டும் போதாது!? அது ஏனென்று தெரிந்து கொள்ள தொடர்ந்து வாசியுங்கள்.

மூன்றாவதாக, இவர்களுள் இவ்வளவு நல்ல கிறிஸ்தவ குணாதிசயங்கள் இருந்தாலும் **ஒரு குறையும்** இருந்தது ஆம். ஒரு, குறை. அது என்ன குறை? வசனம் 4 ல் ஆதியில் கொண்ட **அன்பை விட்டாய்** என்று. அந்த குறை என்னவென்று

சொல்லப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்ட போது இருந்த அன்பை விட , இந்தக் கடிதம் எழுதப்பட்ட காலத்தில் அவர்களுடைய அன்பு குறைந்து காணப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஏனென்றால், இவர்களின் நற்குணங்களை வைத்துப் பார்த்தால், இவர்களின் அன்பைக் குறித்து குறை சொல்ல சற்று யோசிக்கத் தோன்றும். அன்பானவர்களே! நாம், ஒருவரின் செயல்பாடுகளை வைத்து அவருடைய தேவ அன்பின் அளவை அறிய முடியாது என்ற உண்மையை இதன்மூலம் புரிந்து கொள்கிறோம். நாம் நம்முடைய நற்கிரியைகளில் எப்பொழுதும் பெருகுகிறவர்களாக இருக்க வேண்டும்.

ஏழு சபைகளில் ஒன்றாகிய தியத்தீரா சபைக்கு சொல்லும் பொழுது 2:19ல், **... நீ முன்பு செய்த கிரியைகளிலும், பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்** என்று வாசிக்கிறோம். இங்கே ஆவியானவர், தியத்தீரா சபையை எதற்க்குப் பாராட்டுகிறார்? ஆம், அவர்களின் இப்போதைய கிரியைகள் முன்பிருந்தவைகளைப் பார்க்கும் போது அதிகமாக இருந்ததினால் தானே? அதன் அர்த்தம் **தொய்வு** என்பது தேவன் வெறுக்கிற ஒரு காரியமாக இருக்கிறது. எபேசு சபையினுடைய அன்பில் **தொய்வு** இருக்கிறது. வெளி 2:7 ல் ஆதியில் கொண்டிருந்த அன்பையும், ஆதியில் செய்த கிரியைகளையும், சம்பந்தப்படுத்துகிறார். 1 கொரி 15:58 மற்றும் II கொரி 9:8 ல் பவுலடியார், நாம் கர்த்தருடைய கிரியைகளிலும், நற்கிரியைகளிலும் நாம் பெருக வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். எனவே, தொய்வு ஏற்படாமல் நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

பிரியமானவர்களே! இந்த புதிய ஆண்டிலே, தொய்வில்லாத நற்குணங்களையும், நற்கிரியைகளையுமுடைய கிறிஸ்தவர்களாக வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் உதவுவார். ஆமென்! ✝

## கிருபை ஒன்றே போதும்

1. நித்திய கிருபை II கொரி.12:9
2. நிர்மூலமாகாத கிருபை- புல.3:22
3. விலகாத கிருபை- ஏசா.54:10
4. மாறாத கிருபை- ரோ.11:29
5. அருமையான கிருபை-சங்.36:7
6. நலமான கிருபை-சங்.63:3
7. தாங்கும் கிருபை-சங்.94:18

சிறுவர் பகுதி

# கனிகொடுப்பது

Dr. *பிரெய்ஸி*

**ஹாய்** குட்டீஸ்! நீங்கள் எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? மாறிக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலைகளோடு ஒத்துப்போவது கடினமானது என்பது தெரியும். இந்தக் கொள்ளை நோயினால் ஏற்பட்டுள்ள இந்த நிச்சயமற்ற நிலை என்றென்றும் மாறாதவராயிருக்கிற நம் பரமப்பிதாவினால் நிச்சயமாக நன்மையாக முடியும். அதுவரை வீட்டில் உங்கள் நேரத்தை பயனுள்ளதாக செலவழிக்கும்படி நினைவுப்படுத்துகிறேன்.

லூக்கா 13 : 16 லிருந்து – 9 வசனங்களில் கனிகொடுக்காத அத்தி மரத்தைப் பற்றிய உவமையைப் பார்க்கிறோம். இந்த உவமையிலிருந்து நாம் அந்த திராட்சை தோட்டதின் உரிமையாளர் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களும் கனிகொடுக்க வேண்டுமென்று விரும்பினதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் தோட்டத்தில் அத்திமரம் மூன்று வருடங்களாக கனி கொடுக்காமல் இருந்ததைக் கண்டு அதை வெட்டிப் போடும்படி தோட்டக்காரனை கேட்டுக் கொள்கிறார். பிரியமான பிள்ளைகளே, அந்த கனிகொடுக்காத அத்திமரம் போல் இல்லாமல் நாமெல்லாரும் கனிகொடுக்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். கொலோசெயர் 1:10 ல் சகலவித கற்கிரியைகளுமாகிய கனிகளைத்தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து கர்த்தருக்கும் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நாம் நடந்து கொள்ள வேண்டுமென்று வாசிக்கிறோம்.

எனவே, குட்டீஸ்! இந்த நாட்களை நீங்கள் வீட்டில் வேதத்தை வாசிப்பதன் மூலமாகவும், தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைவதன் மூலமாகவும் பயனுள்ளதாக மாற்றி கனிகொடுக்கிறவர்களாயிருங்கள். இவ்வுலகில் எப்போதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதன் மூலமாக ஒளிவீசி பரமப் பிதாவை மகிமைப்படுத்துங்கள்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

வினாக்கள் :

1. திராட்சைத் தோட்டத்தில் என்ன மரம் நடப்பட்டிருந்தது?
2. அத்திமரம் எத்தனை வருடங்களாக கனிகொடுக்காமல் இருந்தது?
3. தோட்டக்காரன் திராட்சைத் தோட்ட உரிமையாளரிடம் என்ன சொன்னார்?
4. நாம் எப்படி தேவனைப் பிரியப்படுத்த முடியும் ?

✝

# அதிக அழுத்தம் கொடுக்க வேண்டிய பண்பு

Bro. **பென்னி மார்ட்டின்**

அன்பான திருமறை ஆசான் வாசகர்களுக்கு அன்பின் உறைவிடமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கையில் பல இடங்களில் நாம் வளர வேண்டியது அவசியமாய் இருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கம் வளர்ச்சிக்கான ஒன்று என்பதை பல சந்தர்ப்பங்களில் நாம் மறந்து விடுகிறோம் அல்லது மறைத்து விடுகிறோம். அதிலும் குறிப்பாக, கிறிஸ்தவ வாழ்க்கையில் அன்பிலே நாம் வளர்ந்து பெருக வேண்டுமென்று தேவனால் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறோம். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர் களிடத்திலே ஆதியில் இருந்த அன்பு தணிந்து விட்டதை நம்மால் காண முடிகிறது. ஆம், நாம் தேவனிடத்திலும், கிறிஸ்தவர் களிடத்திலும் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டோம் எனும் உண்மை நம்மை அதிர்ச்சியில் உறையச் செய்ய வேண்டும். அவசரமும் பரபரப்பும் நிறைந்த இவ்வுலகில் பொருள் ஈட்டும் பொருட்டு சக மனிதர்களை ஒரு பொருட்டாக எண்ணாமல் விரும்பி யவைகளை பெற்றுக்கொண்டோம். ஆனால், அவசியமான அன்பை இழந்துவிட்டோம். இயந்திரமான வாழ்க்கை முறையில் இன்றியமையாத அன்பை காற்றில் பறக்கவிட்டு நட்டாற்றில் நாதியற்று நிற்கிறோம். ஆனால், தேவனுடைய அன்பில் எந்த மாற்றமும் இல்லை ஏற்ற இறக்கங்களுமில்லை. அவர் ஆதியில் நம்மீது எவ்விதமான அன்பை கொண்டிருந்தாரோ அதேவிதமான அன்பைத்தான் தொடர்ந்து கொண்டிருக்கிறார். தேவன் அன்பாகவே இருக்கிறார்.

தேவனுடைய பண்புகளிலேயே மிகச்சிறந்தது அன்புதான். அதனால்தான் அவருடைய பிள்ளைகள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார். பிலிப்பி பட்டணத்து சபையார் அன்பிலே பெருக வேண்டுமென்பது தன்னுடைய ஜெபமாகயிருந்ததாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் (பிலிப்பியர் 1:9-11). தங்களைக் கிறிஸ்தவர் களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களில் எத்தனைபேர் ஒருவரி லொருவர் அன்பாயிருக்கிற காரியத்தில் பெருகியிருக்கிறார்கள்? நாம் அப்படிப் பெருகியிருந்தால் உலகம் இன்னும் நம்மை சற்று உற்றுப் பார்த்திருக்கும். இது ஆதிக் கிறிஸ்தவர்களின் அடையாள மாகவும், அங்கமாகவும் இருந்திருக்கிறது. இதை உலக வரலாற்று ஆசிரியர்கள் கூட வெகுவாக மெச்சியிருக்கிறார்கள்.

## அன்பு செலுத்த முடியாதவர்களிடத்தில் அன்பு கூருதல்

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிற காரியத்தில் முதிர்ச்சி அடைய வேண்டுமென்றால் இதில் கிறிஸ்து எப்படிச் செயல்பாட்டாரோ அதே போல நாமும் செயல்பட வேண்டும். அவரே நமக்கு மிகச்சிறந்த முன் மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8). மனிதனுடைய பாவம் தேவனுடைய பார்வையில் அருவருப்பான ஒன்றாககக் காணப்படுகிறது. இதன் காரணமாக, மனிதன் தேவனுடைய அன்பை பெற்றுக்கொள்ள தகுதியற்றவனாக மாறி விட்டான். பாவத்தின் பக்கவிளைவுகளும் பல கோணங்களில் உருவாகி மனிதனை பதம்பார்த்து விடுகிறது. இத்தகைய சூழ்நிலை யில் கிறிஸ்து மனிதனிடத்தில் அன்புகூர்ந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இதை ஒருவர் எண்ணிப்பார்த்தால் கிறிஸ்துவின் அன்பு அந்நபரை மெய் சிலிர்க்கச் செய்துவிடும்.

நாம் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தால் அன்பு செலுத்த முடியாதவர்களிடதில் கற்றுக்கொள்ள வேண்டும். பலருடைய தீமையான வழிகள் அவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்த முடியாதபடி செய்து விடுகிறது. ஆனாலும், அவர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டுமென்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நாம் சத்துருக்களைக் கூட சிநேகிக்க வேண்டுமென்று நம் அருமை இரட்சகராகிய இயேசு நமக்கு கட்டளையிடுகிறார். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் (மத்தேயு 5:44). இயேசு கிறிஸ்துவின் இந்த போதனைதான் கிறிஸ்தவத்தை மற்ற மதங்களி லிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. மற்ற மதங்கள் பழிக்குபழி வாங்குதலை ஊக்கப்படுத்துகின்றன. ஆனால், கிறிஸ்தவம் மாத்திரமே பழிவாங்குதலை தவிர்த்து சத்துருக்களை சிநேகிக்க வேண்டுமென்று போதிக்கிறது. அப்போஸ் தலனாகிய யோவான் கூட தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்னும் உண்மையை உரக்கச் சொல்கிறார் (I யோவான் 4:21). இதே யோவான் இதற்கு முந்தைய வசனத்தில் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு வருவான் என்று கேட்கிறார். என் பாவங்கள் எத்தனை திரளாயிருந்தாலும் தேவன் என்னிடத்தில் அன்புகூருகிறா ரென்றால் என் சகோதரனோ சகோதரியோ எனக்கு விரோதமாக அருவருக்கத்தக்க காரியங்களைச் செய்தாலும் கூட

என்னால் அவைகளை மறந்து மன்னித்து அவர்களிடத்தில் அன்பு கூர முடியும். இதைக் குறித்து பேதுரு சொல்லும்போது அன்பு திரளான பாவங்களை மூடும் என்று சொல்கிறார். [I பேதுரு4:8] நாம் மற்றவர்களிடத்தில் அன்புகூருவதற்கு கிறிஸ்துவின் அன்பு ஓர் அளவுகோலாக இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம்.

## II. **நம் சத்துருக்களிடத்தில் அன்பு கூருதல்**

இது இவ்வலகில் யாரும் போதிக்காத புதிய போதனை. இது உலகின் மற்ற போதனைகளிரிருந்து வேறுபட்டு தனித்து நிற்கிறது இது செயல்படுத்தபடுவதற்கு கடினமான ஒன்றாக இருந்தாலும் கூட அன்பில் பெருக வேண்டுமென்றால் இதை நாம் செயல்படுத்தியே ஆக வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை சிலுவையில் அதை தந்தவர்களுக்காகக்கூட அதாவது அவர் களுடைய மன்னிப்புகாக கூட ஜெபித்திருக்கிறார் [லூக்கா 23:34]. நம் இரட்கராகிய இயேசு கிறிஸ்து [யோவான்15:13ல்] ஒருவன் தன் சிநேகிதருக்காகத்தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவனிடத்திலும் இல்லையென்று சொன்னார். சொன்னபடியே இயேசு கிறிஸ்து தம்முடைய சத்துருக்களுக்காக தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். இதைவிட பெரிதான அன்பு இவ்வுலகில் இருக்க முடியாது. பொதுவாகவே மனித இனம் உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று தான் கேள்விபட்டிருக்கிறது. ஆனால், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்பின் புதிய பரிமாணத்தை அறிமுகபடுத்தினார். அதாவது உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் உங்களை சபிக்கிறவர் களை ஆவிர்வதியுங்கள்; உங்களை பகைக்கிற வர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களது துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்றால் கிறிஸ்து தம்முடைய சத்துருக்கான சிநேகித்தது போல் நாமும் நத்துருக்கனைச் சிநேகிக்க வேண்டும்

மேலும், அன்பைப்பற்றி விவரமாக விரிவாக உலகில் எந்த இலக்கியத்திலும் இல்லத அளவுக்கு வேதாகமத்தில் I கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிக்கிறது. இவ்வுலகில் பலர் அன்பைப்பற்றி கவிதைகளை வடித்திருகிறார்ர்கள், தத்துவ ஞானங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனால், அவைகளில் அன்பின் ஆளமும் நீளமும் தெளிவாக தெரிவிக்கப்படவில்லை I கொரிந்தியர் 13 ஆம் அதிகாரம் தான் அன்பின் மிகச் சிறந்த

விளக்கமாயிருக்கிறது, இவ்வதிகாரத்தில் இடம் பெற்றறுள்ள அன்பை நாம் பெற்றுக் கொண்டால் நாம் இழந்து போவதற்கு ஒன்றுமே இல்லை.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! நாம் இதுகாரும் அன்பில் அதிகமாகப் பெருகுவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று பார்த்தோம். இவைகளை நம் அன்றாட வாழ்வில் அங்கமாக்கி நடைமுறைப்படுத்தினால் மிகப்பெரிய ஆவிக்குரிய வளர்ச்சியை அடைய முடியும். அதுமாத்திர மல்ல, அன்பெனும் பண்பினில் அனுதினமும் நாம் வளரும்போது நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கும்போது இவ்வுலகம் நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை அறிந்து கொள்ளும். கிறிஸ்தவ மார்க்கத்தை உலகில் வேகமாக பரப்ப அன்பெனும் ஆயுதத்தை அணிந்து அநேகரை ஆதாயப்பபடுத்துவோமகா இதையே புத்தாண்டு தீர்மானமாக கொள்வோம். ஆமென்! ✝

# நாளும், நடப்பும்

**1. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் இம்மாத இறுதிவரை நேரடி வகுப்புகள் கிடையாதென தமிழக அரசு அறிவிப்பு.**

**2. இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் *(ISRO)* புதிய தலைவராக சோமநாத் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.**

**3. இந்தியாவிலேயே தொழில்துறை முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதலிடம்.**

**4. இந்தியாவில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனா தொற்று 40% அதிகரித்துள்ளது.**

**5. ஆசிஸ் தொடரை ஆஸ்திரேலியா கைப்பற்றியது.**

# நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே!

Bro. **பாண்டியன்**

**அ**ன்பின் தேவபிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள். அநேகர் இந்த ஆண்டைக் காணாமல் மரித்திருக்கிறார்கள். நாம் ஜீவனோடே இருக்கிறது தேவனுடைய கிருபை என்று வேதம் சொல்கிறது (புலம். 3:22) அநேகர் உடற்பயிற்சி, உணவு, மருந்து, மாத்திரைகள் மற்றும் தங்கள் பெலத்தினால் ஜீவிப்பதாக நினைத்து கொண்டிருக் கிறார்கள். இயேசு சொன்னது மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல; தேனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை அவருடைய வார்த்தையிலிருந்து ஆராய்ந்து பார்ப்போமாக.

எரேமியாவின் புலம்பலில் நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபை என்று ஏன் புலம்புகிறார்? என ஆராய்ந்தால் நமக்கும் அதில் பாடங்கள் இருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம். எப்படி இஸ்ரவேலர் அழிவுக்குப் பாத்திரராய் இருந்தார்கள் என எரேமியா சிறுவயதிலேயே ஊழியத்தின் ஆரம்பத்திலேயே எரேமியா இரண்டாம் அதிகாரத்தில் அநேகக் காரியங்களை வெளிப்படுத்தியுள்ளார். முதலாவது, 5 மற்றும் 6 வசனங்களில் உங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கி வனாந்திரத்தில் போஷித்த அற்புதமான காரியங்களை செய்த தேவனாகிய என்னை யார்? **எப்படிப்பட்டவர்கள்** என்று அவர்கள் விசாரியாமல் அசட்டை செய்தனர் என சுட்டிக் காட்டினர். நாமும் நம்மை இம்மட்டும் வழி நடத்துகிற **எபெனேசராகிய** தேவனை எந்த அளவுக்கு நினைவுகூர்ந்து அன்பு இருக்கலாம். என்பதை நிதானித்துப் பார்க்க வேண்டும்.

எரே 2:13 ல் இஸ்ரவேலர் செய்த இரண்டு தீமைகளை எடுத்துச் சொல்கிறார். ஒன்று ஜீவத் தண்ணீருள்ள ஊற்றாகிய என்னை விட்டது. மற்றும் தங்களுக்கு வெடிப்புள்ள தொட்டிகளைத் தெரிந்து கொண்டது. அவர்கள் தேவனைவிட்டு விக்கிரகங்களை வணங்கியதை இரண்டு தீமைகளாகக் குறிப்பிட்டு வசனம் 19ல் உன் தீமை உன்னைத் தண்டிக்கும் என்றார். எனக்கன்பானவர்களே! புதிய ஏற்பாட்டில் பொருளாசையானது விக்கிரக ஆராதனைக்குச் சமமாக உள்ளது (எபே 5:5). இந்த நாகரீக உலகத்திலும் அநேகர் பணத்தாசையால் தவறான வழியில் போவார்களானால் அது

இந்தக் காரணங்களால்தான் நாம் நிர்மூலமாகாதிருப்பது கர்த்தருடைய கிருபை என்று எரேமியா புலம்பினார். எரே 2:21 ல் தேவனுடைய எதிர்பார்ப்பு பொய்யாகப் போனதால் அவர்கள் நிர்மூலமாகி இருக்க வேண்டும் என வாசிக்கின்றோம். அதாவது, அந்த ஜனங்களை தேவன் உயர்குல திராட்சைச் செடியாக நாட்டினார். அவர்களோ ஆகாத கனிதரும் கொடிகளாய் மாறிப் போனார்கள். தேவன் இப்போது கிறிஸ்துவுக்குள் நம்மையும் நீர்க் கால்களின் ஓரமாய் நடப்பட்டவர்களாக சபையில் வைத்திருக்கிறார். நாமும் தன் காலத்தில் தன் கனியைத்தரும் அதாவது, ஆவிக்குரிய கனியைத் தரும் மரங்களாக இருக்க வேண்டும். மாறாக, அவிசுவாசம், இச்சை, கோபம், பகை போன்ற காரியங்கள் நம்மில் காணப்படுமானால் தேவன் நம்மையும் நிர்மூலமாக்கிப் போடுவார். ஏனெனில், கோடாரியானது மரத்தின் வேர் அருகே உள்ளது.

ஏரே 2:27-ம் வசனத்தில் அந்த ஜனங்கள் தேவனுக்கு தங்கள் முகத்தை அல்ல முதுகைக் காட்டினார்கள். ஆபத்துக் காலத்திலே எங்களை இரட்சியும் என்றார்கள் என பார்க்கிறோம். இன்றைக்கும் நம்மில் அநேகர் தேவைக்கு மட்டும் தேவனை தேடுகிறவர்களாய் இருக்கின்றோம். கிறிஸ்து நம்மை நற்கிரியையினால் தேவனை மகிமைப்படுத்த சொல்கிறார். அப்போஸ்தலர்கள் நம்மை எதைச் செய்தாலும் இயேசுவின் நாமத்தில் பிதாவை மகிமைப்படுத்தச் சொல்கிறார்கள். ஆகவே, நம் தாழ்விலும் மட்டுமல்ல, வாழ்விலும் தேவனிடம் அன்பு கூர்ந்து எப்போதும் ஜெபித்து உறவாடுகிற ஜனங்களாக இருப்போம். இல்லையெனில், இஸ்ரவேலைப்போல கைவிடப்பட்டவர்களாய் இருப்போம்.

மேலும், தொடர்ந்து எரே 2:27 ம் வசனத்தில் நீங்கள் எனக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினீர்கள் என்றார். ஒரு புருஷனுக்கு மனைவி துரோகம் பண்ணும் விதமாக அவர்கள் தங்கள் தேவனை விட்டு அந்நிய தேவர்களை சேவித்துதட துரோகம் செய்தனர் என்று தேவன் குறிப்பிடுகிறார் (எரே 3:20). சாதாரண மனுஷனுக்காக ஸ்திரீயின் தவறான நடத்தை புருஷனுக்கு மூர்க்கத்தை உண்டு பண்ணும் என்று நீதி 6:34 ல் பார்க்கிறோம். அப்படியானால், தேவனுடைய கோபத்திற்கு முன்பாக நிற்பவன் யார்? அதனால்தான் எரேமியா நாம் நிர்மூலமாகாதிருப்பது தேவனுடைய கிருபை என்றார். அதேபோல 2:30 ல், அவர்கள் சிட்சையை ஏற்க புத்திரராகக் காணப்பட்டார்கள். நாமும் சிட்சயை சகிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்பதை மறக்கக் கூடாது.

இன்னும் எரே 2:32 ல், ஒரு மணவாட்டி தன் ஆடை, ஆபரணங்களை மறவாமல் அதன்மீது வாஞ்சையாய் இருப்பதுபோல அல்லாமல் என் ஜனங்கள் எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள் என்று ஒப்பிட்டுச் சொல்கிறார். தேவனை மறக்கிறவர்களை பீறிப்போடுவேன் என்பதை சங் 50:22 ல் வாசிக்கின்றோம். அவர்கள் நரகத்திலே தள்ளப்படுவார்கள் சங் 9:17 ஆனால், தேவனோ தம்முடைய மிகுந்த இரக்கங்களினால் அவர்களை நிர்மூலமாக்கவில்லை (நெகே. 9:31). பலி, தூபவர்க்கம் தசமபாகம், பண்டிகை பழைய ஏற்பாட்டு ஆராதனைக்குரியது. புதிய ஏற்பாட்டில் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலி, ஜெபம் வரவுக்குத்தக்கதான காணிக்கை என ஆவியோடும், உண்மை யோடும் நாம் தொழுதுகொள்கிறோம்.

பாபிலோனியர் சிறைபிடிப்பின்போது கூட தேவன் தம் ஜனங்களுக்கு ஒன்றும் ஆகக்கூடாது என்று நினைத்து அந்த எதிரிகளும் இரக்கம் காட்ட வைத்தார் என்பது நம்மை ஆச்சிரியத்தில் ஆழ்த்துகிறது. சங்கீதம் 106:43-46. தேவன் இஸ்ரவேலரை முற்றும் அழிக்காமல் இருந்ததற்கு வேறொரு முக்கியக்காரணம் உள்ளது. அது என்னவெனில், அப்படி அவர் இஸ்ரவேலரை அழித்து இருந்தால் அவர் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கை அர்த்தமற்றுப்போயிருக்கும். எனவே, தமது உடன்படிக்கையின் நிமித்தமாகவே தேவன் அவர்களை அழிக்கவில்லை. இப்போது நாமும் பிழைத்திருப்பது நமதாண்டவர் செய்த அவருடைய இரத்தத்தினால் ஆகிய புது உடன்படிக்கையே காரணம் என்பதை உணர்ந்து தேவனுக்குப் பிரியமாக நடந்துகொள்வோம். தேவக்கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்! ✝

## வேதாகமத்தில் உபவாசம் இருந்தவர்கள்

1. **மோசேயின் உபவாசம் (40 நாட்கள்) இருமுறை. யாத்.24:18,34:28 உபா.10:10 (1-10)**
2. **இயேசுவின் உபவாசம் (40 நாட்கள்) மத்.4:2 (1-11)**
3. **தானியேல் உபவாசம் (21 நாட்கள்) தானி.9:3-21 தானி.10:2,3**
4. **யாபேஸ் பட்டணத்தாரின் உபவாசம். (7 நாட்கள்) 1 சாமு.31:13 (1-13)**
5. **எஸ்தர் மற்றும் யூதர்களின் உபவாசம் (3 நாட்கள்) எஸ்தர் 4:16,(1-17)**

# தேவனை ஒருவரும், ஒருபோதும் கண்டதில்லை

**Bro. K.M. பிலிப்**

**பு**த்தாண்டுக்குள் பிரவேசித்திருக்கிற உங்கள் யாவருக்கும் நல்மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்றைய கிறிஸ்தவ மத உலகில் தரிசனம், அந்நிய பாஷை பரிசுத்த ஆவியின் வரங்கள் என்ற அளவில் அதிகமான குழப்பங்களும், தவறுகளும் மக்களை திசை திருப்பிக் கொண்டிருக்கின்றன. எப்பொழுதும் உண்மையே பேசினால் அதில் குழப்பத்திற்க்கு இடம் இருக்காது பொய் ஊடுருவும் பொழுது இன்று தேவனைக் கண்டேன் என்பதில் தரிசனம் வெளிப்பாடு என்ற அளவில் பொய் கலப்பதால் மாபெரும் குழப்பமும், தேவதூஷணமும், சாபமும் உண்டாகும் நிலையைக் காணமுடிகிறது. ஊழியர்கள் என்ற பெயரில் இப்படிப்பட்ட தவறை துணிந்து பேசுவதால் விசுவாசிகளாக விரும்பும் மக்கள் பதிக்கப்படுகிறார்கள் என்பது தான் வேதனை அளிக்கிறது. இது குறித்து நம் இடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும், சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயுத்தமாயிருப்போம் (1பே3:15).

தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை (1யோ4:12) என்றுவேதம் சொல்லுகிறது. இவ்வசனத்தை இருபிரிவாகப் பிரித்துக் கவனிப்போம் 1.தேவனை ஒருவரும் கண்டதில்லை அதாவது, மனித இனத்தில் பிறந்த ஒருவரும் கணடதில்லை. இது தேவனோடு உறவாடிக் கொண்டிருந்த ஆதாம் முதல் இன்று வாழும் எல்லா மனிதருக்கும் பொருந்தும் 2-தேவனை ஒருக்காலும் கண்டதில்லை. அதாவது, இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமாகிய மூன்று காலங்களிலும் ஒருக்காலத்திலும் கண்டதில்லை. இது ஆதாம் ஏனோக்,நோவா, ஆபிரகாம், மோசே, இராஜாக்கள், தீர்க்கதரிசிகள், யோவான் ஸ்நானகன், அப்போஸ்தலர்கள், ஆதிவிசுவாசிகள் என்று யாவரும் அடங்குவர். தொடர்ச்சியாக, வருகைமட்டுமுள்ள சகல மனிதர்களுக்கும் இது பொருந்தும். ஒரு காரியத்தை நிலைநாட்ட 2,3 சாட்சிகள் அவசியம் என்று வேதம் சொல்லுகிறது. (உப17.6 எண்35:30) I யோவான் 4:12, யோ: 1:18;6:46 I தீமோத்தேயு 6.16 - ஆகிய நான்கு வசனங்களும் தேவனை ஒருவரும் ஒருக்காலும் காணமுடியாது. என்பதை திட்டமும் தெளிவு மாகக் கூறுகிறது. 1 தீமோ. 6:16 ல் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாத வருமாயிருக்கிறவர் என்று திட்டவட்டமாய் சொல்லப்படுகிறது 4 - மெய் சாட்சிகள் சொல்லியிருக்க தேவனைக் கண்டேன் என்பது துணிகரம் அல்லவா? வேத வசனத்தைப் புறக்கணிப்பது பாவம்

அல்லவா? இதில் இயேசுவே தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை.இவரே பிதாவைக் கண்டவர் என்று [யோ6:46] சொல்லியிருக்கிறார். அன்பானவர்களே! தெளிவு பெறுங்கள் ஏனெனில், இந்த வசனங்கள்தான் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும் [யோவான்12:48].

சில சமயங்களில் வசனத்தை முழுமையாய் புரிந்து கொள்ளாதது தவறான எண்ணங்களுக்கு வழிவகுக்கும். யோவா:14:9–ல் இயேசு என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். ஆகவே, இயேசுவைக் கண்டவர்கள் பிதாவைக் கண்டவர்கள் என்ற தவறான கருத்தை எடுத்துக் கொள்கிறார்கள். இமற்கு ஆதரவாக யோவா 10:30 – ல் நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். என்ற வசனத்தை சுட்டிகாட்டுகிறார்கள். ஒன்றாய் என்பது ஒருவராய் என்று அர்த்தமல்ல. உதாரணமாக, நானும் என் மனைவியும் பிள்ளைகளும் ஒன்றாயிருக்கிறோம் என்றால் ஒருவராய் இருக்கிறோம் என்று பொருளாகுமா? அதுபோலவே யாத் 33:11 ல் கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார். என்பதற்கு யாத் 33:20 ல் நீ என் முகத்தைக் காணமாட்டாய். ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது. என்று தேவனே தெளிவாய் கூறி விட்டார். மேலும், 33 : 23, எண் 6:25,26 வசனங்களை வாசித்து தெளிவடையுங்கள். பிரியமானவர்களே ! தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்கு செவி கொடுக்கிறபடியால் [யோவான் 8:47] நாம் வசனத்தை விசுவாசிப்போம்.

இவ்வளவு உண்மைகளிருந்தும், தேவனைக் கண்டேன் என்பவர்கள் தங்களுக்கு ஏதோ சிறப்பு தகுதி இருப்பதாகப் பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள். அருமையானவர்களே! தேவனைக் கண்டதில்லை என்று 4 வசனங்ளில் தெளிவாய் கூறும் யோவன், பவுலைக் காட்டிலும் இவர்கள் தகுதி வாய்ந்தவர்களா? சிந்தியுங்கள். மேலும், முதல் நூற்றாண்டு சபையாரை பேதுரு பாராட்டுகிறார். காரணம், அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோசமுள்ளவர்களால் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள் [1பேது 1:8,9]என்றார். இதையே பவுல் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். [IIகொ5:6]என்று சபையாரோடு தன்னையும் இணைத்துக் கொள்கிறார். அன்பானவர்களே ! காணதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்ய வான்கள் என்று இயேசுவே சொல்லியிருக்கிறார் [யோ20:29].ஏற்றுக் கொண்டு பாக்கியவான்களாய் வாழ்வோம். ஆம் அவருடைய கற்பனைகளின் படி செய்கிற பாக்யவான்களாயிருந்து வாசல் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்போம் [வெளி 22 : 14].

தேவஜனமே! நாம் தேவனைக்கண்டதில்லை என்பதைக் காட்டிலும் இப்பூமியில் வாழும் நமக்கு கிடைக்கும் தைரியம் சமாதானம் அவர் நம்மை காண்கிற தேவன் (11நா16:9) என்பதும் அவருடைய கண்கள் மனு புத்திரரைக்காண்கிறது என்பதுமாகும் (சங் 11:4) மேலும், உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனைஆம், தடுமாறும் இவ்வுலகில் நிலையான வாழ்க்கை வாழ தேவையான ஆலோசனைகளை வேதத்தின் மூலம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். அவைகளை கைக்கொள்கிறதினால் மிகுந்த பலன் உண்டு (சங்19:8 இதுபோதும்.)

நாம் தேவனைக் கண்டதில்லை. ஆனால், அவரோடு வாழ முடியும். காற்று, மின்சாரம் இவற்றைக் கண்களால் காண்பதில்லை. ஆனால், அவைகளோடு வாழ்ந்து கொண்டுயிருக்கிறோம் ஏனோக்கும் நோவாவும் அநேக ஆண்டுகளட தேவனோடு இணைந்து வாழ்ந்தார்கள். காரணம் தேவகளோடு காரணம், தேவனோடு ஒருமனப்பட்டிருந்தார்கள் சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்பதே அவர்கள் வாழ்க்கையாயிருந்தது இதைதான் இயேசு ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக் கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடெ வாசம் பண்ணுவோம் என்று கூறியுள்ளார் (யோ14:23). ஆம், நாம் தேவனோடு ஒருமனப்பட்டவர் களாய் அவருடைய கற்பனைகளுக்கு மடடும் செவி சாய்த்து வசனத்தோடு கூட்டவோ குறைக்கவோ, மிஞ்சி எண்ணாமல், உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லி இணைந்து வாழ்வோமேயானால் இப்பூமியில் தேவனோடும் கிறிஸ்துவோடும் வாழும் வாழ்க்கையை நாம் அனுபவிக்க முடியும். இதுவே பாக்கியம் என்பதை எண்ணி மகிழ்ச்சியடையுங்கள்.

தேவனைக்கண்டதில்லை. ஆனால், நிச்சயம் காண்போம். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை (எபி12:14) இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் (மத்5:8). ஆகவே, நமக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாழ்க்கையில் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடு அவர் சந்திதியில் காணப்படும்படி ஜாக்கிரதையிருப்போம். மனித உபதேசத்தை முற்றிலும் விலக்குவோம். ஆவியாயிருக்கிற தேவனை ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்வோம் (யோவான் 4:24). தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போம். காத்திருப்போம். கிறிஸ்துவின் வருகையில் தேவனைக் காண்போம். ஆமென்! ✝

# வெளிப்படுத்தின விசேஷம் ஓர் எளிய விளக்கவுரை கேள்விபதில் வடிவில்

**சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜ்குமார்**

## அதிகாரம் - 2

59. எபேசு சபைக்கு எழுதின கடிதத்தின் வேதவசன பகுதியை குறிப்பிடவும்?

**பதில்** : வெளி. 2: 1– 7.

60. எபேசு சபைக்கு கடிதம் யார் மூலம் அனுப்பப்பட்டது? வெளி. 2:1.

**பதில்** : தூதன் மூலம் (புதிய ஏற்பாட்டின் காலத்திலும் தூதர்கள் தேவ சித்தத்தின்படி வேலை செய்திருக்கிறார்கள்). அப். 12:7 – 11; 27:23; மத்.28:2; I பேது. 1: 12;

61. எபேசு சபைக்கு எழுதும் பொழுது இயேசு கிறிஸ்து தம்மை எப்படி வெளிப்படுத்துகிறார்? வெளி. 2:1.

**பதில்** : ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவராக வெளிப்படுத்துகிறார்.

62. எந்த நல்ல செயல்கள் அவர்களிடம் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்? வெளி 2:2

**பதில்** : நல்ல கிரியைகள், பிரயாசம், பொறுமை, பொல்லாதவர் களைச் சகிக்கக்கூடாமலிருப்பது ஆகியவை.

63. எபேசு சபையார் சோதித்து அறிந்த ஒரு கள்ளப்போதனை என்ன? வெளி 2:2

**பதில்** : அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தல ரென்று சொல்லுகிறதை சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்தார்கள், II கொரி. 11 : 13.

64. இன்றைக்கும் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களா?

**பதில்** : ஆம், இன்றைக்கும் தாங்கள்தான் அப்போஸ்தலர் களுடைய வாரிசுகள், நாங்களும் அற்புதங்கள் அடையாளங்கள் செய்கிறோம், அந்நிய பாஷை பேசுகிறோம், நாங்கள்தான் ஆவிக்குரிய உண்மையான சபை என்று ஏமாற்றுகிறார்கள்.

உண்மையான அப்போஸ்தலர்கள் யார்? இன்றைக்கு அப்போஸ்தலர்கள் பூமியில் உள்ளனரா? என்பதைக் குறித்த பாடம் இந்த விளக்கவுரையுடன் இணைக்கப்பட்டுள்ளது அதை கவனமாக படிக்கவும்.

65. நாமும் கள்ள அப்போஸ்தலர்களை என்ன செய்ய வேண்டும்?

**பதில்** : அவர்களுக்கு உண்மையான சத்தியத்தை போதிக்க வேண்டும். ஏனென்றால், ஒருவரும் கெட்டுப்போவது தேவனுக்குப் பிரியமில்லை , II பேது. 3:9. தொடர்ந்து அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவில்லையானால் அவர்களை விட்டு விலக வேண்டும், தீத். 3: 10 ; சங். 119:53 ; நீதி. 15: 10.

66. எபேசு சபையின் மூப்பர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கொடுத்த எச்சரிக்கை என்ன? அப். 20:28 – 30.

**பதில்** : உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார் களென்று அறிந்திருக்கிறேன் என்றார்.

67. எபேசு சபையின் நற்பண்புகள் என்னென்ன? வெளி. 2:3.

**பதில்** : சகிப்புத்தன்மை, பொறுமை, இயேசுவின் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசம் அவர்களுக்கு இருந்தது.

68. எபேசு சபையார் எதை விட்டுவிட்டதாக இயேசுவானவர் குறைபடுகின்றார்? வெளி. 2:4.

**பதில்** : அவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டார்கள் என்று குறைபடுகின்றார். அதற்காக அவர்களுக்கு அன்பைப்பற்றி போதிக்கப்பட்டது, எபே. 3: 14 – 19.

69. அன்பு குறையும் போது அதனோடு வேறெதுவும் தவறிப் போகிறது? எபே. 5:22 – 27.

**பதில்** : விசுவாசமும் கீழ்ப்படிதலும் தவறிப்போகிறது. ஆகையால், அவர்களுக்கு கீழ்ப்படிதல் மற்றும் மணவாளனுடைய தியாகமும் போதிக்கப்பட்டது.

70. அவர்கள் தங்களை சரிசெய்து கொள்ள செய்ய வேண்டியது என்ன? வெளி. 2:5.

**பதில்** : ஆகையால், அவர்கள் இன்ன நிலைமையிலிருந்து விழுந்தார்கள் என்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டும்.

71. அப்படி மனந்திரும்பாத பட்சத்தில் என்ன நடக்கும்? வெளி. 2:5.

**பதில்** : சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் என்கிறார். இதின் அர்த்தம் கிறிஸ்துவினுடைய சத்தியம், அன்பு, ஐக்கியம், ஜீவன், ஆசீர்வாதங்கள் போன்றவை களை இழந்துபோவார்கள்.

72. நிக்கொலாய் மதஸ்தாரைப்பற்றி விவரிக்கவும்! வெளி. 2:6.

**பதில்** : a. பெர்கமு சபைக்கு எழுதும் போது இவர்களைப்பற்றி எச்சரிக்கப்பட்டது, வெளி. 2 : 15.
b. அப்போஸ்தலர் நடபடிகள் 6:5ல் குறிப்பிடப்பட்டிருக்கும் நிக்கொலாவுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் உள்ளதாகத் தெரியவில்லை . c. ஆனால் இவர்கள் மார்க்கத்திலே வைராக்கியம் இல்லாத மக்கள். d. விக்கிரக ஆராதனை, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டு புசிப்பதை ஏற்றுக் கொள்பவர்கள். e. திருமண பந்தம் மற்றும் ஒழுக்க நெறி களுக்கு விலக்கானவர்கள் என்பதாகக் குறிப்பு உள்ளது.

73. இந்த நிக்கொலாய் மதத்தினருக்கு ஒப்பாக இன்றைக்கு யாரைச் சொல்லலாம்?

**பதில்** : a. சத்தியத்தில் நடக்கிறோம் என்று சொல்லி விக்கிரகங்களை, உதாரணமாக இயேசுவின் படம் , சிலுவை, தேவதூதர்கள், கட்டிடங்கள் மற்றும் மனிதர்களை வணங்கு கிறவர்கள். b. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை சாப்பிடுகிறவர்கள். c. ஒழுக்க நெறிமுறைகள் அற்றவர்கள். d. உடல் மண்ணுக்குப் போகிறது ஆகையால் உடலால் செய்யும் தவறுகள் பாவம் அல்ல என்பவர்கள்.
e. Flexible Christian life (சூழ்நிலைக்கு ஏற்றார்போல் வளைந்துகொடுக்கும் கிறிஸ்தவ வாழ்க்கை) உள்ளவர்கள்.
f. நாமகரான கூட்டத்தாரோடு இணைந்து வேலை செய்கிறவர்கள்.
g. ஆவிக்குரிய என்று சொல்லி கிறிஸ்துவின் உபதேசத்தை விட்டு, கள்ள சத்தியம் மற்றும் உலக வாழ்க்கை வாழ்கிறவர்கள் இன்னும் ஏராளம் சொல்லலாம். ✝

**Rajanayagam in Tamil:**

Friday 7.30 - 8.00 pm on Nambikkai TV
Saturday 7.00 - 7.30 am on Tamilan TV

**Hindi TV Program:** Sunny, Francis & Vinay David

Sunday & Tuesday 7.00 - 7.30 pm & Friday
8.00 - 8.30 pm on Shubhasandesh Hindi Channel

**P.K. Varghese in Malayalam:**

Every Saturday 6.00 - 6.30 am on Jai Hind Channel TV

**Philemon & Kingsley in Tamil:**

Every Sunday 7.00 - 7.15 am on Tamilan TV
Every Sunday 3.30 - 4.00 pm on Nambikkai TV
Every Saturday 9.00 pm on Joy TV

**Philemon & Kingsley in English:**

Every Sunday 2.00 - 2.30 pm on Salvation TV

**Arjunan in Tamil:**

Every Saturday 8.00 - 8.30 pm on Nambikkal TV
Every Tuesday 6.00 - 6.30 pm on Tamilan TV
Every Thursday 6.00 - 6.30 pm on Heaven TV

**Joshua & Ricky Gootam in Telugu:**

Every Sunday at 6.00 pm on Subhavartha Channel
Every Thursday at 2.30 pm on Rakshana Channel
Every Saturday at 6.30 am on Aradhana Channel
Every day at 6.30 am & 3.00 pm on Kanthi TV in A.P. only.
MAHA News Channel Friday at 6.30 am

**Thang Lien in Manipur:**

TC Net Work
Monday 6.30 - 7.00 pm
Wednesday 6.00 - 7.00 pm
Friday 6.00 - 7.00 pm

**Amul Bansod - Aurangabad (Marathi):**

MCN News Channel Monday, Wednesday,Friday
7.30 - 8.00 am

✝

# செங்கல்பட்டு ஊழியத்தின் போது...



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| விசுவாசத்தினாலே இரட்சிப்பு | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| அதிக அழுத்தம் கொடுக்க ... | 21 |
| நாம் நிர்மூலமாகாதிருக்கிறது ... | 25 |
| தேவனை ஒருவரும் ஒரு ... | 28 |
| வெளிப்படுத்தின விசேஷம் | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.




## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026






Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023
Published on 17/18 th of Every Month


## எங்களது இதர வெளியீடுகள்



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் **எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.






Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 35 இதழ் - 1 ஜனவரி - 2022

தனிப்பிரதி ரூ.10/-